இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 23-08-2024

# காஷ்மீரில் ஜனநாயகக் காற்று..

ஒருவழியாக மனமிரங்கி காஷ்மீருக்கு தேர்தல் தேதியை அறிவித்து விட்டார்கள். அங்கே ஜனநாயகக் காற்று வீசுவதற்கான சூழல் உருவாகி இருக்கிறது.

இப்போதும் அவர்களாக தேர்தல் தேதியை அறிவிக்கவில்லை. உச்சநீதிமன்றம் கடுமையான உத்தரவைப் பிறப்பித்த பிறகுதான் அறிவித்துள்ளார்கள். "2024 செப்டம்பர் 30 ஆம் தேதிக்கு முன்பாக, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக ஜம்மு - காஷ்மீர் சட்டசபைக்கு தேர்தல் நடத்த வேண்டும்" என்று கடந்த 12.12.2023 அன்று உச்சநீதிமன்றம் கடுமையான உத்தரவைப் பிறப்பித்தது. அதனால்தான் இப்போது தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு செப்டம்பர் 10, 25, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் மூன்று கட்டங்களாகத் தேர்தல் நடக்க இருப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார். அக்டோபர் 4 வாக்குகள் எண்ணப்படுகின்றன. ஜம்மு - காஷ்மீரில் மொத்தம் 90 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இதில் பொதுத் தொகுதிகள் 74. பழங்குடியினருக்கு 9 தொகுதிகளும், பட்டியல் பழங்குடியினருக்கு 7 தொகுதிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கான, மக்களாட்சி உருவாக காஷ்மீர் மக்கள் வாக்களிக்க இருக்கிறார்கள்.**

பா.ஜ.க. கண்ணில் எப்போதும் காஷ்மீர் உறுத்திக் கொண்டே இருக்கும். 370 என்ற சிறப்புத் தகுதி இருப்பதால், 'இந்தியாவே பலவீனம் அடைகிறது' என்பதைப் போன்ற தோற்றத்தை பா.ஜ.க. அரசியல் களத்தில் உருவாக்கிக் கொண்டு இருந்தது. பாபர் மசூதி இடிப்பு, பொது சிவில் சட்டம் கொண்டுவருவது, காஷ்மீருக்கான சிறப்புத் தகுதி அளிக்கும் 370 ஆவது அரசியல் சட்டத்தை நீக்குவது - இவை மூன்றும்தான் பா.ஜ.க.வின் அரசியல் நோக்கங்கள். இதற்காகத் தான் பிறந்தது. இதற்காகத்தான் வாழ்ந்தும் வருகிறது.

**பாபர் மசூதியை இடித்த இடத்தில் கோவில் கட்டப்பட்டு விட்டது. 370 சட்டப்பிரிவு நீக்கப்பட்டு விட்டது. பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான பம்மாத்தை பா.ஜ.க. தொடங்கிவிட்டது. மற்றபடி, இந்திய நாட்டு மக்கள் குறித்த எந்தக் கவலையும் தங்களுக்கு இல்லை என்பதை பா.ஜ.க. தினந்தோறும் மெய்ப்பித்துக் கொண்டு இருக்கிறது.**

2014 ஆம் ஆண்டு ஜம்மு - காஷ்மீரில் சட்டசபைத் தேர்தல் நடந்தது. அப்போது எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. மெகபூபா முப்தியின் மக்கள் ஜனநாயகக் கட்சி 28 இடங்களையும், பா.ஜ.க. 25 இடங்களையும், பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி 15 இடங்களையும், காங்கிரஸ் கட்சி 12 இடங்களையும் கைப்பற்றியது.

மெகபூபா முப்தியின் மக்கள் ஜனநாயகக் கட்சியும், பா.ஜ.க.வும் இணைந்து கூட்டணி ஆட்சியை அமைத்தன. மெகபூபா முப்தி, முதலமைச்சராக இருந்தார். நான்கு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார் முப்தி. அவரது ஆட்சியைக் கவிழ்த்தது பா.ஜ.க.. இந்நிலையில் மற்ற கட்சிகள் இணைந்து ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் இறங்கின. இதனை அறிந்த பா.ஜ.க., ஆட்சியைக் கலைத்தது. குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைத்தது. ஜனநாயகத்தின் மூச்சுக் காற்று 2018 ஆம் ஆண்டு காஷ்மீரத்தில் நிறுத்தப்பட்டது.

'இதற்குத்தான் காத்திருந்தோம்' என்பதைப் போல சதித் திட்டத்தை அடுத்தடுத்து அரங்கேற்றியது பா.ஜ.க.. காஷ்மீரத்துக்கு வழங்கப்பட்டு வந்த 370 ஆவது சிறப்புத் தகுதியை நாடாளுமன்றத்தின் மூலமாகப் பறித்தார்கள். ஜம்மு - காஷ்மீருக்கான மாநிலத் தகுதியைப் பறித்தார்கள். ஜம்மு - காஷ்மீர் என்றும் லடாக் என்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களாக அந்த மாநிலத்தை வகுத்தார்கள். தேர்தலை நடத்தினார்களா என்றால் இல்லை. 2019 முதல் 2024 வரை தேர்தலே அங்கு நடத்தப்படவில்லை.

தொகுதி வரையறை என்ற பெயரால், இசுலாமியர் பெரும்பான்மை வந்துவிடாதவாறு ஒவ்வொரு தொகுதியையும் சிதைக்கும் காரியங்களையும் கச்சிதமாகப் பார்த்தார்கள். இந்துக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் 6 தொகுதிகள் அதிகம் ஆகி விட்டது. இசுலாமியர் அதிகம் வசிக்கும் பகுதியில் 1 தொகுதி மட்டுமே அதிகமாகி உள்ளது. தேர்தலுக்குள் இன்னும் பல செயல்களை அரங்கேற்றுவார்கள்.

காஷ்மீர் மாநிலத்துக்கு 1950 முதல் வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமையை விலக்கிக் கொள்ளும் முடிவை ஒன்றிய பா.ஜ.க. அரசானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் தேதி நிறைவேற்றியது. இதனை உச்சநீதிமன்றமும் ஒப்புக்கொண்டு விட்டது என்பது உண்மைதான். அதற்கு உச்சநீதிமன்றம் சொன்ன காரணம், "370 ஆவது பிரிவை நீக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு" - என்பது மட்டும்தான்!

காஷ்மீர் மாநிலத்தை காஷ்மீர் - லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களாக பா.ஜ.க. அரசு மாற்றியது. இதையும் உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டது என்பதும் உண்மைதான். அதற்கு உச்சநீதிமன்றம் சொன்ன காரணம், "எந்த மாநிலமாக இருந்தாலும் அதனைப் பிரித்து யூனியன் பிரதேசமாக மாற்றும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு உண்டு" - என்பது மட்டும்தான்!

அவர்களுக்குள்ள அதிகாரப்படி செய்து கொண்டார்கள் என்பதை மட்டுமே உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டது. இந்தத் தீர்ப்பில் கவனம் செலுத்த வேண்டிய வேறு சில உத்தரவுகளும் இருந்தன. **காஷ்மீரை மாநிலமாக உயர்த்தியாக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது. அதனை பா.ஜ.க. அரசு செய்தாக வேண்டும்.**

தீர்ப்பளித்த ஐந்து நீதிபதிகளில் ஒருவரான நீதியரசர் கௌல், **"1980 ஆம் ஆண்டு முதல் காஷ்மீரத்தில் நடந்து வரும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க பாரபட்சமற்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அமைக்க வேண்டும்"** என்று தீர்ப்பளித்து இருந்தார். அதனைச் செய்தாக வேண்டும்.

**புதிதாக உருவாக இருக்கும் மக்கள் அரசு, காஷ்மீரத்து மக்களது கோரிக்கைகளை நிறைவேற்றும் அரசாக அமைந்தால் மட்டுமே அங்கு ஜனநாயகக் காற்று வீசும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2024) முகாம் அலுவலகத்தில், News 18 செய்தியாளர் நந்தா மற்றும் மாலை முரசு தொலைக்காட்சி செய்தியாளர் செலினா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சன் தொலைக்காட்சி தலைமைச் செய்தி ஆசிரியர் குணசேகரன், நியூஸ் 18 தமிழ் தொலைக்காட்சி தலைமைச் செய்தி ஆசிரியர் கார்த்திகை செல்வன், மாலை முரசு தொலைக்காட்சி தலைமைச் செய்தி ஆசிரியர் தமிழரசன், குமுதம் டிஜிட்டல் தலைமைச் செய்தி ஆசிரியர் அரவிந்த் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### உயர் கல்வித்துறை சார்பில் தெரிவு செய்யப்பட்ட

# 120 மாணவ - மாணவியர் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர ஊக்கத் தொகை!

## மாதம் ரூ.25 ஆயிரம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!

**சென்னை, ஆக. 23-**

**உயர்கல்வித் துறை சார்பில் முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகைத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களுக்கு ஆராய்ச்சி படிப்பைத் தொடர மாதம் ரூ.25,000/ ஊக்கத் தொகை பெறுவதற்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2024) தலைமைச் செயலகத்தில், உயர் கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியருடைய ஆராய்ச்சி திறனை மேம்படுத்திடவும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்திடவும் முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகைத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களுக்கு ஆராய்ச்சி படிப்பைத் தொடர மாதம் ரூ.25,000/- ஊக்கத் தொகை பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்ற மாணவிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவிகள் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில மாதந்தோறும் ரூ.1000/- உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டம், அதேபோன்று மாணவர்கள் உயர்கல்வி பயின்றிட "தமிழ்ப் புதல்வன்" திட்டம், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் 30.8.2022 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டில், முதலமைச்சர் அவர்கள், "நம்முடைய மாணவர்களின் ஆராய்ச்சி திறமையை மேம்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புகளை தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்தவும் "CM Research Fellowship" "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை" திட்டம் தொடங்கப்படும். இதற்கான மாநில அளவில் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்" என்று அறிவித்தார்.

அதன்படி, தமிழ்நாட்டில் உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவியருடைய ஆராய்ச்சி திறனையும், புதிய கண்டுபிடிப்புகளையும் ஊக்கப்படுத்திடும் வகையில், முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை திட்டத்தில் பயன்பெற்றிட ஆராய்ச்சி மாணவர்களை தெரிவு செய்வதற்காக ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தகுதித் தேர்வு 10.12.2023 அன்று நடத்தப்பட்டு, 120 மாணவ, மாணவியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 60 மாணவர்கள் அறிவியல் பாடப் பிரிவையும், 60 மாணவர்கள் கலை, மானுடவியல் மற்றும் சமூகவியல் பாடப் பிரிவையும் சார்ந்தவர்கள் ஆவார்கள். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்கள் தங்கள் ஆராய்ச்சி படிப்பினை அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடர மாதம் ரூ.25,000/- ஊக்கத் தொகையாக மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 12.31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை தொடங்கி வைக்கும் விதமாக முதலமைச்சர் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களில் 10 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத் தொகை திட்டத்திற்கான ஆணைகளை நேற்று வழங்கினார். இத்திட்டம், தமிழ்நாடு உயர்கல்வி நிறுவனங்களில் முதுநிலை பயின்று ஆராய்ச்சி மேற்கொள்ள இருக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கல்லூரி கல்வி இயக்குநர் எஸ். கார்மேகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

# அமைச்சர் எ.வ.வேலு எழுதிய "கலைஞர் எனும் தாய்" நூல்! முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று வெளியிடுகிறார்!

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் - முதல் நூலைப் பெற்றுக் கொள்கிறார்!

**சென்னை, ஆக. 23-**

**அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் எழுதியுள்ள 'கலைஞர் எனும் தாய்' எனும் நூலினை, நாளைய தினம் (24.8.2024) சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெறும் எழில்மிகு விழாவில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிடுகிறார்.**

**நூலின் முதற்படியை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.**




*இவ்வினிய விழா பற்றிய விபரம் வருமாறு:-*

*முத்தமிழறிஞர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து அமைச்சர் எ.வ.வேலு எழுதியுள்ள "கலைஞர் எனும் தாய்" எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை (24.8.2024 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை யாற்றுகிறார்.*

*இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நூலை வெளியிட்டுச் சிறப்புரை யாற்றுகிறார்.*

*முதல் நூலை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பெறுகிறார்.*

*இந்நூல் குறித்து - குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், 'இந்து' குழும நிறுவனர் 'இந்து' என்.ராம் ஆகியோர் ஆய்வுரையாற்றுகின்றனர்.*

*விழாவில், நூல் ஆசிரியர் அமைச்சர் எ.வ.வேலு ஏற்புரையாற்றுகிறார்.*

*சீதை பதிப்பகம் கௌரா இராசசேகர் நன்றி கூறுகிறார்.*

*இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*இவ்விழா குறித்து, நூலின் ஆசிரியர் - அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், "என் நெஞ்செமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தலைவர் - அருமை அண்ணன் - முத்தமிழறிஞர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து நான் எழுதிய 'கலைஞர் எனும் தாய்' என்னும் நூலினை - திராவிட மாடல் நாயகர் - இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர் - இரண்டாம் கலைஞராய் இன்று உயர்ந்து நிற்கும் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று வெளியிடவும் - சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் முதல் நூலைப் பெற்றுக் கொள்ளவும் இசைந்துள்ளார்கள்.*

*நெஞ்சுக்கு நெருக்கமான இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்."*

*என்று குறிப்பிட்டு, அனைவரும் விழாவில் பங்கேற்க அன்பழைப்பு விடுத்துள்ளார்.*

# போராட்டத்தை கைவிட்டு விட்டு மருத்துவர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும்!

## மருத்துவர்களுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்!

*கொல்கத்தா, ஆக. 23 -*

*கொல்கத்தா பெண் மருத்துவர் கொலை விவகாரத்தில், போராட்டத்தை கைவிட்டுவிட்டு மருத்துவர்கள் மீண்டும் பணிக்கு திரும்ப வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.*

*மேற்குவங்க மாநிலத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில், இரவு பணியில் இருந்த பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு நாடு முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனை கண்டித்தும், நாடு முழுவதும் மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கக் கோரியும் மருத்துவர்கள் தேசிய அளவில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*இந்த வழக்கை உச்சநீதிமன்றம் தீவிரமாக விசாரித்து வருவதால் மருத்துவர்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டுவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என்று நீதிபதிகள் அறிவுறுத்தியிருந்தனர். இந்நிலையில், இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, இதே அறிவுறுத்தலை நீதிபதிகள் மீண்டும் வலியுறுத்தினர். மேலும், தேசிய அளவில் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அமைக்கப்பட்டுள்ள குழுவானது ரெசிடென்ட் மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்து மருத்துவர்களிடமும் ஆலோசனை நடத்தி பரிந்துரை வழங்க வேண்டும் என்று ஆணையிட்டனர். இதனிடையே, பெண் மருத்துவர் படுகொலை விவகாரத்தில், சி.பி.ஐ., நிலை அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தது.*